**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

# பதவி வெற்றிடங்கள்

**பணிப்பாளர் நாயகம் (01) – இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் – SLIDA**

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் (SLIDA) மேற்படி பதவிக்கான தகைமையுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் மற்றும் நிபுணத்துவம்**
**(வெளியக விண்ணப்பதாரிகள்)**

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் விடயதானங்களுக்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்பட்டமொன்றுடன் கூடிய அரசாங்கத்தில் அல்லது நியதிச்சட்ட சபையொன்றில் அல்லது நிறைவேற்று/ முகாமைத்துவ பதவிகளில் 20 வருட சேவை காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் அதில் ஐந்து (05) வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (HM 2-1) அனுபவத்தினை பெற்றிருத்தல்

  **அல்லது**

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் விடயதானங்களுக்குரிய பின்பட்டமொன்றுடன் கூடிய இலங்கை நிர்வாகச் சேவையின் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் மற்றும் நிறைவேற்று/ முகாமைத்துவ பதவிகளில் 20 வருட சேவை காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் அதில் ஐந்து (05) வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவத்தினை பெற்றிருத்தல். (அ.சே.ஆ.கு. நடபடிமுறை சட்டம் தொகுதி I இன் XII ஆம் அத்தியாயத்தின்படி விடுதலை செய்யும் போது)

**(உள்ளக விண்ணப்பதாரிகள்)**

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் விடயதானங்களுக்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்பட்டமொன்றினைக் கொண்டிருத்தல்.

  **மற்றும்**

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ/ நிறைவேற்று மட்டத்தில் உத்தியோகத்தராக 20 வருட அனுபவம் மற்றும் அதில் மூன்று (03) வருடங்கள் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியிருத்தல்.

(இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் விடயதானம் எனப் பொருள்படுவது, மனித வளங்கள் முகாமைத்துவம்/ வியாபார முகாமைத்துவம்/ கணினி அறிவியல்/ தகவல் தொழில்நுட்பம்/ பொது நிர்வாகம்/ வணிகவியல்/ பொருளியல்/ அரசியல் விஞ்ஞானம்/ சமூகவியல்/ சட்டம் ஆகிய பாடங்களாகும்)

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும்,**

- 35 வயதிற்கு குறையாத மற்றும் 55 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு குறைந்தபட்ச வயதெல்லை பாதிப்பினை ஏற்படுத்தாது.
- பதவிக்கு இணைத்துக் கொள்வதற்காக பூர்த்தி செய்திருக்க வேண்டிய அனைத்து தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் தினத்திற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பப்படிவம் 2026 ஐப்பசி மாதம் 16 தினம் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி பதிவுத் தபாலில் செயலாளர், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகப் பதவி" என குறிப்பிடல் வேண்டும்.

**எஸ். ஆலோகபண்டார**
**செயலாளர் பொது நிர்வாக,**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.**